This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# ஹைபுன்

www.writersujatha.com

இந்த வாரம் ஹைபுன், ஹைகா என்கிற இரண்டு வடிவங்களைப் பற்றிச் சொல்கிறேன். ஹைபுன்–ஒரு சிறு வருணனை அல்லது நடைச்சித்திரம்; அதைத் தொடர்ந்து இறுதியில் ஒரு ஹைக்கூ கவிதை இருக்க வேண்டும் (ஹைக்கூ என்பது மூன்று வரிகளில் பதினேழு அசைகளுக்குள் ஒரு காட்சியை வியக்க வைக்கும் கவிதை).

ஹைபுனுக்கு உதாரணம் பாருங்கள்... (எழுதியவர் ரே ராஸ்முசென், கனடா.)

அலுவலகத்தில் கடைசி தினம்.

எல்லாம் காகிதங்களையும் கிழித்துக் குப்பைத் தொட்டியில் சேர்த்தாகிவிட்டது. புகைப்படங்களை அதனதன் இடத்திலிருந்து பெயர்த்தாகிவிட்டது. கம்ப்யூட்டர் இணைப்பை பிடுங்கி எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். புத்தங்களை லைப்ரரிக்கு அனுப்பியாகி விட்டது. விருதுகளையெல்லாம் சுவரிலிருந்து நீக்கியாகிவிட்டது. சேர்ந்த தினத்திலிருந்து தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்த தொட்டிச் செடிகள் எல்லாம் எங்கோ போயின.

குளிர்காலம் முடிந்தபின்
எத்தனை விரைவாக
பனி உருகுகிறது

இந்த ஹைபுன் ஒரு போட்டிக்கு அனுப்பப்பட்டு பரிசு பெற்றது.

ஹைகா என்பது ஒரு அருமையான படத்திற்காக எழுதப்படும் ஹைக்கூ கவிதை. இதற்கான இரண்டு உதாரணங்கள் படங்களுடன் கொடுக்கவில்லை எனினும் என்ன படம் என்பதை யூகிக்கலாம்.

www.writersujatha.com

1.
குரல் இல்லையேல்
வெள்ளைக் கொக்குகள்
காலை வெண்பனியில்
மறைந்து விடும்

2.
அறுபதாம் பிறந்த நாள்
இந்தப் புராதனக் குதிரை
இன்னும் தாவிக் கொண்டு

கொஞ்சம் உன்னிப்பாகப் பார்த்தால் ஹைபுன் எங்கும் கிடைக்கும். இப்படித்தான் பி ஸ்ரீ அவர்களின் 'நான் அறிந்த தமிழ் மணிகள்' என்கிற புத்தகத்தில் திருநெல்வேலி பாலம்



www.writersujatha.com